**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

8075274

C

1. District : மாவட்டம் கன்னியாகுமரி PS: காவல்நிலையம் V&AC Nagercoil Year: ஆண்டு 2021 FIR No.: மு.த.அ. எண் 1/2021 Date: நாள் 22.02.2021

2. (i) Act சட்டம்: IPC Sections பிரிவுகள்: 120-B, 167, 409, 34 IPC
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்: 13(2) r/w 13 (1) (a) of the PC Act 1988 as amended by Act 16/2018
(iii) Act சட்டம்: The PC Act 1988 as amended by Act 16/2018 Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 25.10.2018 Date to : நாள் வரை 12.04.2019
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 22.02.2021 Time : நேரம் 14.00 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 22.02.2021 Time : நேரம் 14.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் ஆற்றூர், காவின்குளம் வடமேற்கு, சுமார் 25 கி.மீ
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் த.த.ரெமா (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் திரு.ரஸ்டின் தாமஸ்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 08.05.1976 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் காவல் ஆய்வாளர் (g) Address : முகவரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கன்னியாகுமரி மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1.திருமதி.**T.S**.ஜீவா, உதவி பொறியாளர், பேரூராட்சிகள், ஆரல்வாய்மொழி தலைமையிடம், கன்னியாகுமரி மாவட்டம்.
2.திரு.**M**.சனல்குமார், உதவி செயற்பொறியாளர், பேரூராட்சிகள், கன்னியாகுமரி மாவட்டம்.
3.திரு.**F.G**.பிரபாசிங் ராஜன், ஒப்பந்தக்காரர், வாழவிளை, ஆற்றூர், திருவட்டார் அஞ்சல், கன்னியாகுமரி மாவட்டம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

இல்லை

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

எதிரிகள்:
1.திருமதி.T.S.ஜீவா, உதவி பொறியாளர், பேரூராட்சிகள், ஆரல்வாய்மொழி தலைமையிடம், கன்னியாகுமரி மாவட்டம்.
2.திரு.M.சனல்குமார், உதவி செயற்பொறியாளர், பேரூராட்சிகள், ஆரல்வாய்மொழி தலைமையிடம், கன்னியாகுமரி மாவட்டம்.
3.திரு..F.G.பிரபாசிங் ராஜன், அரசு ஒப்பந்தக்காரர், வாழவிளை, ஆற்றூர், திருவட்டார் அஞ்சல், கன்னியாகுமரி மாவட்டம்.

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:- இன்று 22.02.2021-ம் தேதி 14.00 மணிக்கு கன்னியாகுமரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் T.T.ரெமா ஆகிய நான் நிலையத்தில் பணியிலிருந்த போது, சென்னை-16, ஆலந்தூர், M.K.N சாலை, எண்.293, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, இயக்குநர் அலுவலக உத்தரவு V.R.No.17240/2019/TP/KK நாள்.08.02.2021-படி, மார்ஜினில் கண்ட எதிரிகள் 1.திருமதி.T.S.ஜீவா, 2.திரு.M.சனல் குமார், 3.திரு.F.G.பிரபாசிங் ராஜன் ஆகியோர் மீது கன்னியாகுமரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 01/2021 சட்ட பிரிவுகள் 120-B, 167, 409, 34 IPC மற்றும் 13(2) உ/இ 13 (1) ( a ) of the Prevention of Corruption Act, 1988 as amended by Act 16/2018 -ன் படி வழக்கு பதிவு செய்தேன். வழக்கின் விபரம் தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் திரு.S.ஜாண் பெஞ்சமின், பதவி ஆய்வாளர்......... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ........................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 22.02.2021
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 14.45 hrs

Name: பெயர் ..த.த.ரெமா..............
Rank: நிலை காவல் ஆய்வாளர் No. எண் .........
ஊ.த.க பிரிவு,
கன்னியாகுமரி மாவட்டம்

முதல் தகவல் அறிக்கை தொடர்ச்சி பக்கம்-------3

குற்ற அலுவலர்-1 திருமதி.T.S.ஜீவா, உதவி பொறியாளர், பேரூராட்சிகள், ஆரல்வாய்மொழி தலைமையிடமாக 09.03.2019-ம் தேதி பிற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார். இவர் இதற்கு முன் குலசேகரம் பேரூராட்சியை தலைமையிடமாக கொண்டு 21.09.2016 முதல் 08.03.2019-ம் தேதி முற்பகல் முடிய பணிபுரிந்துள்ளார். அப்போது அவர் களியக்காவிளை, பளுகல், இடைகோடு, பாகோடு, ஆற்றூர் மற்றும் கடையாலுமுடு பேரூராட்சிகளில் உள்ள அனைத்து பணிகளுக்கும் மதிப்பீடு தயார் செய்தல் மற்றும் பணிகளை நடைமுறைபடுத்துதல் போன்ற வேலைகளுக்கு பொறுப்பாவார். குற்ற அலுவலர்-2 திரு.M.சனல் குமார், அவர்கள் உதவி செயற் பொறியாளர், பேரூராட்சிகள்-ஆக 01.03.2019-ம் தேதி முதல் தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார். இவர் பேரூராட்சிகளில் நடைபெறவுள்ள வேலைகளுக்கு தொழில் நுட்ப அனுமதி வழங்கவும், அதை தொடர்ந்து வேலைகள் செய்து முடித்த பின்னர் அந்த வேலைகளுக்கு Check measurement, Work Completion Report மற்றும் வேலைக்கான பட்டியலுக்கு மேலொப்பம் செய்வது போன்ற வேலைகளுக்கு பொறுப்பாவார். குற்றம் சாட்டப்படும் நபர்-3 திரு.F.G.பிரபாசிங் ராஜன், வாழவிளை, ஆற்றூர், திருவட்டார் அஞ்சல், கன்னியாகுமரி மாவட்டம் என்பவர் ஒரு பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர் ஆவார். இவர் இவ்வழக்கு சம்மந்தமான பணியை மேற்கொள்ள ஒப்பந்தம் செய்து கொண்ட ஒப்பந்தக்காரர் ஆவார். மேற்படி குற்ற அலுவலர்கள் 1-ம், 2-ம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புச் சட்டம் 1988 பிரிவ 2 (C)ன் படி அரசு ஊழியர்கள் ஆவார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தில் மொத்தம் உள்ள 55 பேரூராட்சிகளில் ஆற்றூர் பேரூராட்சியில் மொத்தம் 15 வார்டுகள் உள்ளன. பொதுவாக பேரூராட்சி பகுதிகளில், மக்களுக்கு சுகாதாரமான குடிதண்ணீர், தெருவிளக்கு வசதி, சாலை வசதி மற்றும் கழிவு நீர் ஓடை அமைத்து சுகாதாரம் பேணுதல் போன்றவை செயல் அலுவலரின் பணியாகும். பொதுவாக பேரூராட்சிகளில் எந்த ஒரு பணி செய்ய வேண்டுமானாலும், அப்பணி தொடர்பான பொருள், பேரூராட்சி மன்றத்தில் வைக்கப்பட்டு, தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, தீர்மான நகலுடன், அந்த பணிக்கான மதிப்பீடு தயார் செய்யக்கேட்டு, செயல் அலுவலர், சம்மந்தப்பட்ட பேரூராட்சி உதவி செயற்பொறியாளர் அவர்களுக்கு விண்ணப்பம் செய்வார். அதன் பேரில், பேரூராட்சிகளின் உதவி பொறியாளர் அவர்களால், மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, அந்த மதிப்பீட்டிற்கு உதவி செயற்பொறியாளர் அவர்களால் தொழில்நுட்ப அனுமதி அளிக்கப்படும். அதன் பின்னர், அப்பணி தொடர்பாக செயல் அலுவலரால் டெண்டர் விளம்பரம் செய்யப்பட்டு, டெண்டர் விதிமுறைகள் கடைபிடிக்கப்பட்டு, ஒப்பந்த புள்ளிகள் பெறப்பட்டு, அதற்கான ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு, குறைந்த ஒப்பந்த

புள்ளிக்கு மன்ற அங்கீகாரம் பெற்று, குறைந்த ஒப்பந்த புள்ளி வழங்கிய ஒப்பந்தக்காரருக்கு செயல் அலுவலரால் பணி ஆணை வழங்கப்பட்டு, ஒப்பந்தக்காரர் அந்த பணியை மதிப்பீட்டில் குறிப்பிட்டுள்ள அளவு மற்றும் தரத்தின் படி பணி ஆணை கிடைக்கப்பெற்ற பின் குறிப்பிட்ட தினங்களுக்குள் பணியை முடித்து கொடுப்பதாக செயல் அலுவலருடன் ஒப்பந்தம் (Agreement) செய்து கொள்வார்கள். பின்னர் அந்த பணியானது பேரூராட்சி உதவி பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளர்களால் செயலாக்கம் செய்யப்பட்டு, செய்யப்பட்ட பணிக்கு பொறியாளரால் பட்டியல் தயார் செய்யப்படும். அந்த பட்டியல் தொகையில், பிடித்தங்கள் போக மீதமுள்ள தொகை ஒப்பந்தக்காரருக்கு செயல் அலுவலரால் காசோலை மூலம் வழங்கப்படும். இவ்வாறு செய்யப்பட்ட பணிகளில் ஏதேனும் குறைபாடு காணப்பட்டால், அதற்கு அந்த பணியை செயல்படுத்திய பொறியாளர்களும், ஒப்பந்தக்காரரும், பட்டியல் தொகை வழங்கிய செயல் அலுவலரும் பொறுப்பாவார்கள். மேற்குறிப்பிட்ட சந்தேக அலுவலர்களான உதவி பொறியாளர், உதவி செயற் பொறியாளர் ஆகியோர் ஆற்றூர் பேரூராட்சியில் பணிபுரிந்த காலத்தில், 14-வது நிதிகுழு மானிய திட்டத்தின் கீழ், ஆற்றூர் பேரூராட்சிக்குட்பட்ட காவின்குளம் செல்லும் சாலை, கருந்தளம் அமைத்து மேம்பாடு செய்தல் பணியை, மதிப்பீடு, தொழில் நுட்ப அனுமதி, நிர்வாக அனுமதி, பணி ஆணை மற்றும் ஒப்பந்தம் ஆகியவற்றில் குறிப்பிட்டவாறு தார் சாலையாக செய்யாமல், ஒப்பந்தக்காரருடன் கூட்டாக சேர்ந்து மதிப்பீட்டிற்கு முற்றிலும் மாறாக தரம் குறைவாக சிமெண்ட் காங்கிரீட் சாலை போட்டு அரசு பணத்தை கையாடல் செய்துள்ளார்கள். குற்ற அலுவலர்-1 திருமதி.T.S.ஜீவா அவர்கள் மேற்படி காவின்குளம் செல்லும் சாலையில், கருந்தளம் அமைத்து, மேம்பாடு செய்தல் பணியை, மதிப்பீட்டில் குறிப்பிட்டபடி, 100 மீட்டர் தூரத்திற்கு பக்கசுவர் கட்டி, 800 மீட்டர் தூரத்திற்கு தார்சாலை (கருந்தளம்) அமைக்கும் பணியில், பக்கசுவர் கட்டும் பணியை ஒப்பந்தக்காரர் திரு.F.G.பிரபாசிங் ராஜன் அவர்கள் 01.02.2019-ம் தேதி ஆரம்பித்துள்ளதாக அளவு சுவடியில் பொய்யாக குறிப்பிட்டுள்ளார். மேலும் தொடர்ந்து அந்த பணியுடன் மதிப்பீட்டில் உள்ளபடி மேற்படி சாலையில் 800 மீட்டர் தூரத்திற்கு தார் சாலை அமைக்காமல், மதிப்பீடு, பணிஆணை மற்றும் ஒப்பந்தம் ஆகியவற்றிற்கு முற்றிலும் முரணாகவும், தகுந்த எந்தவித காரணமும் இல்லாமலும், உயர் அதிகாரிகளின் எந்த அனுமதியும் பெறாமலும், திருந்திய மதிப்பீடு எதுவும் தயார் செய்து அனுமதி பெறாமலும், அந்த சாலையில் சுமார் 200 மீட்டர் தூரத்திற்கு மட்டும் மிகவும் தரம் குறைந்த காங்கிரீட் சாலை அமைத்துள்ளார்கள். பக்க சுவர் கட்டும் பணியானது 01.02.2019-ம் தேதி தொடங்கப்பட்டு 07.03.2019-ம் தேதியன்று பணி முடிக்கப்பட்டுள்ளதென்றும், சிமெண்ட் காங்கிரீட் சாலை பணியானது 12.02.2019-ம் தேதி ஆரம்பிக்கப்பட்டு 07.03.2019-ம் தேதி

முடிக்கப்பட்டுள்ளதென்றும் சந்தேக அலுவலர்-1 திருமதி T.S.ஜீவா அவர்கள் அளவு சுவடியில் குறிப்பிட்டுள்ளார். ஆனால் அந்த பணியினை 31.03.2019-ம் தேதி முடிய அப்போதைய உதவி செயற்பொறியாளர் பார்வையிட்டு மேலளவு செய்யவில்லை. இந்நிலையில் 01.03.2019-ம் தேதி அந்த பேரூராட்சியில் செயல் அலுவலராக பணிக்கு அறிக்கை செய்த செயல் அலுவலர் திரு.மகேஷ்வரன் என்பவரால் அன்றைய தேதியிலேயே (01.03.2019) திட்ட இயக்குனர் அவர்களுக்கு மேற்படி சாலை பணிக்கு P.C.C 1:2:4 20mm metel காங்கிரீட் சாலைக்கு Cube Test ஆய்வு செய்து தரச்சான்று வழங்க கேட்டு கடிதம் அனுப்பட்டுள்ளது. இப்பணியை ஒப்பந்தக்காரர் திரு.F.G.பிரபாசிங் ராஜன் அவர்கள் 01.02.2019-ம் தேதி தொடங்கி 07.03.2019-ம் தேதி செய்து முடித்துவிட்டதாக சந்தேக அலுவலர்-1 திருமதி.T.S.ஜீவா அவர்களால் அளவு சுவடியிலும் அளவுகள் எழுதப்பட்டுள்ள இப்பணியை, கன்னியாகுமரி மாவட்டத்தில் பேரூராட்சிகளின் உதவி செயற்பொறியாளராக 01.03.2019-ம் தேதி பணிக்கு அறிக்கை செய்த சந்தேக அலுவலர்-2 திரு.M.சனல் குமார் அவர்கள் 01.03.2019-ம் தேதியே மேலளவு செய்ததாக காணப்படுகிறது. தொடர்ந்து சந்தேக அலுவலர்-1 திருமதி.T.S.ஜீவா அவர்களால் P.C.C 1:2:4 20mm metel காங்கிரீட் சாலைக்கு Cube Test ஆய்வறிக்கை வருவதற்கு முன்னரே, 09.03.2019-ம் தேதி மேற்படி பணி நடைபெற்றதாக 09.03.2019-ம் தேதியன்று பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது. இந்தப்பணியில் குற்ற அலுவலர்-1 திருமதி.T.S.ஜீவா, உதவி பொறியாளர், குற்ற அலுவலர்-2 திரு.M.சனல் குமார், உதவி செயற்பொறியாளர் ஆகியோர் கூட்டாக சேர்ந்து, ஒப்பந்தக்காரர் திரு.F.G.பிரபாசிங் ராஜன் அவர்கள் துணையுடன், காவின்குளம் சாலையில் பக்கசுவர் கட்டி சிமெண்ட் காங்கிரீட் சாலை ரூ.16,00,000/- மதிப்பில், பணி செய்ததாக குற்ற அலுவலர்-1 திருமதி.T.S.ஜீவா அவர்களால் பட்டியல் தயார் செய்யப்பட்டு, அப்பட்டியல் குற்ற அலுவலர்-2 திரு.M.சனல் குமார் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டு, செயல் அலுவலர் திரு.மகேஷ்வரன் அவர்களால் Bill Pass செய்யப்பட்டு பட்டியல் தொகை ரூ.16,00,000/- தில் பிடித்தங்கள் ரூ.1,29,920/- போக மீதி தொகை ரூ.14,70,080/- ஆனது காசோலை எண்.399600 நாள் 12.04.2019-படி குற்ற நபர்-3 திரு.F.G.பிரபாசிங் ராஜன் ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்டுள்ளது. காவின்குளம் சாலை மேம்பாடு பணியை பொறுத்தமட்டில், மதிப்பீட்டிற்கு முற்றிலும் மாறாக, தரமற்ற ஒரு சாலை பணியை குற்ற அலுவலர்கள்-1 மற்றும் 2 ஆகியோர் கூட்டு சேர்ந்து செய்துவிட்டு அளவு சுவடியில் பதிவு செய்து, பட்டியல் தயார் செய்து, காசோலை வழங்கப்பட்டிருப்பது தெளிவாக தெரிய வருகிறது. இதன் மூலம்

குற்ற அலுவலர்கள்-1 மற்றும் 2 ஆகியோர்களால் அரசு பணம் பெருமளவில் (Huge Loss) கையாடல் செய்யப்பட்டிருப்பது தெரிய வருகிறது. இந்தப்பணி மூலம் அரசு பணம் எவ்வளவு கையாடல் செய்யப்பட்டுள்ளது என்பதனை, அப்பணியை மேலாய்வு (Super Check) மற்றும் தர ஆய்வு (Quality Test) செய்தால் தான் தெரிய வரும். எனவே ரூபாய் 16,00,000/- செலவில் ஆற்றூர் பேரூராட்சிக்கு உட்பட்ட காவின்குளம் சாலையில் செய்யப்பட்டதாக குறிப்பிடும் பக்க சுவர் மற்றும் சிமெண்ட் காங்கிரீட் சாலை பணியை மேலாய்வு மற்றும் தர ஆய்வு செய்து, இழப்பை கணக்கீடு செய்து நடவடிக்கை மேற்கொள்ள குற்ற வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது. காவின்குளம் சாலை மேம்பாடு பணியை பொறுத்தமட்டில் 1-ம், 2-ம் குற்ற அலுவலர்கள் அரசு ஊழியர்களாக இருந்து கொண்டு, 3-வது குற்றம் சாட்டப்படும் நபருடன் சேர்ந்து, ஆற்றூர் பேரூராட்சி, 12-வது வார்டு பகுதிக்குட்பட்ட, காவின்குளம் செல்லும் சாலையை மேம்பாடு செய்து, கருந்தளம் அமைத்தல் பணிக்காக ஒதுக்கப்பட்ட நிதி ரூபாய் 16,00,000/-ல் கையாடல் செய்ய வேண்டுமென்ற பொதுவான குற்ற எண்ணத்துடன், 25.10.2018 முதல் 12.04.2019 வரை சதியாலோசனையில் பங்கேற்று மதிப்பீட்டிற்கு முற்றிலும் மாறாக தார் சாலைக்கு பதிலாக தரமற்ற ஒரு காங்கிரீட் சாலை பணியை மேற்கொண்டு, அளவு சுவடியில் தவறான பதிவுகளை ஏற்படுத்தியும், தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட பணியை அதற்கான முறையில் அளவுகள் படி மேற்கொள்ளாமல், அப்பணிக்கென ஒதுக்கப்பட்ட தங்கள் ஆதிக்கத்தின் கீழுள்ள நிதியைப் பொறுத்து தவறான பட்டியல் தயார் செய்து, காசோலை வழங்கியும், காசோலை பெற்றும், குற்றமுறு நம்பிக்கை மோசடி செய்தும், தவறான குற்ற நடத்தையில் ஈடுபட்டு, பரஸ்பரம் தங்களுடைய சொந்த பயன்பாட்டிற்கு, நிதியை பெருமளவு கையாடல் செய்துள்ளார்கள். மேலும் கையாடல் மூலம் அரசுக்கு ஏற்பட்ட நிதியிழப்பை கணக்கிடவும் இதர விசாரணைகள் மேற்கொள்ளவும் இன்று 22.02.2021-ம் தேதி 14.00 மணிக்கு மார்ஜினில் கண்ட எதிரிகள் மீது கன்னியாகுமரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 01/2021 சட்ட பிரிவுகள் 120-B, 167, 409, 34 IPC மற்றும் 13(2) உ/இ 13 (1) ( a ) of the Prevention of Corruption Act, 1988 as amended by Act 16/2018)-ன் படி முறையாக குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது.

முதல் தகவல் அறிக்கை அசலை கனம் முதன்மை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சிறப்பு நீதிமன்றம் அவர்களுக்கும், விசாரணை நகலை கன்னியாகுமரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் திரு.S.ஜாண் பெஞ்சமின் அவர்களுக்கும், இதர நகல்களை சம்மந்தப்பட்ட உயரதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன்.

22/02/2021